1993 ஏப்ரல் 13]

வினா எண் 331, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

331—

சின்னாறு அணையிலிருந்து குடிநீர் வழங்கல்

*(*14492)* **திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் சின்னாறு அணையிலிருந்து எந்தெந்தப் பகுதிக்கு குடிநீர் வழங்கப்பெறுகின்றது?

(ஆ) அப்பகுதிகளுக்குப் போதிய அளவு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பெறுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) தருமபுரி மாவட்டத்தில் சின்னாறு அணையிலிருந்து எந்தப் பகுதிக்கும் குடிநீர் வழங்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சின்னாறு அணைப் பகுதியிலுள்ள பஞ்சப்பள்ளி கிராமத்திலிருந்துதான் தர்மபுரி நகருக்கு குடிதண்ணீர் சென்று கொண்டு இருக்கிறது. அந்தக் குடிதண்ணீர் வாரத்திற்கு இரண்டு முறை என்ற வீதத்தில் இப்போது சென்றுகொண்டு இருக்கிறது. எனவே, ஒரு நாள் விட்டு ஒரு நாளாவது குடிதண்ணீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தர்மபுரி நகருக்காக உள்ள குடிதண்ணீர் திட்டம். அந்தத் திட்டத்தின் தலைமை இடம் சின்னாற்றில் பஞ்சப்பள்ளி கிராமம் அருகே அமைந்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் மாரஹண்டஹள்ளி மற்றும் பாலக்கோடு பேரூராட்சிகள் பயன் அடைகின்றன. இதனால் பயன்பெறும் மக்கள் தொகை 75 ஆயிரம் ஆகும். மேற்கண்ட குடிதண்ணீர்த் திட்டம் அரசைச் சார்ந்த பேரூராட்சி மற்றும் நகராட்சி பராமரிப்பில் இருக்கிறது. இந்தப் பகுதியினுடைய நீர் ஆதாரத்தை மையமாகக் கொண்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.35

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய் கிராமமான பஞ்சப்பள்ளி கிராமத்திற்கு இந்த நீர் ஊற்றிலிருந்து தண்ணீர் அளிக்கப்படுவதில்லை. ஆகவே, பஞ்சப்பள்ளி கிராமத்திற்கு இந்தத் திட்டத்தின்கீழ் தண்ணீர் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதைப்பற்றி பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னாறு அணை பக்கத்திலுள்ள பஞ்சப்பள்ளி கால்வாய் மூலமாக என்னுடைய தொகுதியிலுள்ள பாப்பாரப்பட்டி பேரூராட்சி பகுதி வழியாகத்தான் தர்மபுரிக்கு குடிதண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. ஒரு கிளைக் கால்வாய் மூலம் 20,000 மக்கள் தொகை கொண்ட பாப்பாரப்பட்டி பேரூராட்சிக்கு குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிரந்தரமாக தீர்வுகாண அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 332, திரு. நா.சா. பழனிசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

332—

நிலவள வங்கிகள் மூலம் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஜாமீன் இல்லாக் கடன்.

* *11096* **திரு. நா.சா. பழனிசாமி:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலவள வங்கிகள் மூலம் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஜாமீன் இல்லாக் கடன் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,